## தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்! 2026 தேர்தலில்

# கழக அரசின் சாதனைகளை துண்டுப் பிரசுரங்கள் மூலம் கடை கடையாக வழங்குவோம்!

## கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றம்!








சென்னை, மார்ச் 5 - 2026 தேர்தலில் கழக அரசின் சாதனைகளை துண்டு பிரசுரம் மூலம் கடை கடையாக விநியோகம் செய்வோம் என்று கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம், அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில், மாநில செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில், மாநில நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

தளபதி - கலைஞரின் விரிவு தளபதியிடம் இருக்கிறது - கலைஞரிடமிருந்த புரிவு பரிவு ஒன்றிய அரசிடமிருந்து அநீதி நேரக்கண்டால் எழும் இவரிடமிருந்து எரிவு - இவரால் தான் சரியான நேரத்தில் சரியான சமயத்தில் சரியானது சனநாயகத்துக்கு நேர்ந்த சரிவு தப்பாகுமா என்ன தமிழ் மக்களின் தெரிவு நீங்கியது அதன் நீண்ட கழுத்தில் பத்தாண்டுகளாக இருந்த நெறிவு இவருக்கும் வெற்றிக்கும் இனி இல்லை பிரிவு

என இந்தியாவே பாராட்டும் பண்பாட்டின் சிகரம் தமிழக முதல்வர் தளபதிக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறும் வகையில் தமிழகம் முழுவதும் மார்ச் மாதம் 1ஆம் தேதி பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பது என்றும், அறுசுவை உணவு வழங்குவது என்றும், நலத்திட்ட உதவிகள் வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஒன்றிய அரசு நிதி தராமல், நெருக்கடி தமிழ்நாட்டிற்கு தந்த போதும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை அடுத்த ஆண்டு முதல் ரூ. 2,000 என அறிவித்தமைக்காகவும், முன்கூட்டியே திட்டமிட்டு ரூ.5,000 வழங்கியமைக்காகவும், 15 லட்சம் மக்களுக்கு கூடுதலாகவும் மொத்தம் 1 கோடி 30 லட்சம் மக்களுக்கும் வழங்கியமைக்காகவும், தமிழக முதல்வர், வள்ளலார் போல் வாடிய பயிர் கண்டு வாடிடும் தளபதி அவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

வணிகர்கள் இடர் நீக்கிட 20,000 கோடிக்கு மேல் வரிகளை, கடன் நிலுவை வரிக்கடன்களை தள்ளுபடி செய்த பூமி பந்தின் அதிசய நிகழ்வு உலா வரும் தளபதிக்கு கோடான கோடி நன்றி அறிவித்தலை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சி கடைகளின் குத்தகைக்காலம் 9 ஆண்டுகள் என்று இருந்ததை, 12 ஆண்டுகளாக உயர்த்தி வணிகர்களின் வாழ்வாதாரத்தை நிரந்தரமாக பாதுகாத்து வரும் தமிழக முதல்வர் தளபதிக்கு நன்றிகூறுகின்றோம்.

மக்களை பாதிக்கும் வகையில் செயல்படும் ஒன்றிய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், தர்மேந்திர பிரதான் செயல்களை கண்டிப்பதோடு நிதி ஒதுக்கி தந்திட வேண்டுகிறோம்.

முந்தைய ஆட்சி காலத்தில் முடக்கி வைக்கப்பட்டு இருந்த வணிகர்கள் நல வாரியத்தை மீண்டும் சீரமைத்து 20 வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை 30 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மே-5 தினத்தை வணிகர் தினமாக அறிவித்ததுடன், குடும்ப நலநிதி உதவித்தொகை 5 லட்சமாக உயர்த்திய முதல்வர் தளபதிக்கு நன்றி கூறுகிறோம்.

வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கான பட்டியலில் வரு வருமான வரி உள்ளவர்களுக்கு இல்லை என்பதை பரிசீலனை செய்திட வேண்டுகிறோம்.

தமிழ்நாடு அறிவித்தது போல ஒன்றிய அரசும் “புதிய சமாதான திட்டத்தை” அறிவித்து நீண்ட கால நீதிமன்றங்களின் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டுகிறோம்.

மூத்த முன்னோடிகள் அ.தி.மு.க.வில் இல்லை. அப்படியே இருந்தாலும் எடப்பாடி அவர்களை இருக்க விடுவதில்லை என்கிற கொள்கை வழிகாட்டுதல்படி சமீபத்தில் எடப்பாடியால் விலக்கப்பட்ட முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ் அவர்களை இருகரம் நீட்டி வரவேற்று, ஆரத் தழுவிய தமிழக முதல்வரை, திராவிடத்தின் அடையாளத்தை வரவேற்கிறோம்.

மதுபான கொள்கை வழக்கு என பொய் வழக்கு போட்டு, கொல்லைப்புறமாக பிடித்த டெல்லி ஆட்சியை கலைத்துவிட்டு, அங்கே மீண்டும் தேர்தல் நடத்தி “ஜனநாயகன்” படத்தைத் தான் விடவில்லை. ஜனநாயகத்தையாவது காப்பாற்றுங்கள் என ஒன்றிய அரசை வேண்டுகிறோம்.

பொய் வழக்கு வலையை உடைத்து வெளியே வந்த கெஜ்ரிவால், மணிஷ் சிசோடியாவை, கவிதாவை இருகரம் நீட்டி உள்ளத்தால் உறவாடி உவகையுடன் வரவேற்கிறோம்.

2026 தேர்தலை முன்னிட்டு வர்த்தகர்களுக்கு தி.மு.க.வின் தமிழக அரசு செய்த சாதனைகளை, துண்டு பிரசுரம் மூலம் கடை கடையாக சென்று விநியோகம் செய்வதுடன், தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்திட இந்த மூன்று மாதமும் உழைத்திட தீர்மானித்திருக்கிறோம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், கடலையூரில் ரூ35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் மண்டல துணை வட்டாட்சியர் பொன்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் நவநீதகண்ணன், ராமசுப்பு, அன்புராஜன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அன்பில் தர்மலிங்கம்

**மார்ச் 5 (1993)**



நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களில் பங்கு கொண்டதன்றி தி.மு.க. உருவானபோது கழகத்தில் முக்கிய பங்கேற்று பணியாற்றினார்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

திருச்சி மாவட்டச் செயலாளராக 1950 முதல் 1972 வரை பணியாற்றினார்.

திருச்சி மாவட்டத்தில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. 2வது மாநில மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக பணியாற்றியவர்.

மாநாட்டிற்கு கழகத்தவரை அண்ணா வருமாறு அழைப்பு விடுக்கும்போது அதற்காக திராவிட நாடு இதழில் எழுதிய தம்பிக்கு மடலில் “அன்பில் அழைக்கிறார்” என்றே தலைப்பிட்டு எழுதினார்.

சட்டமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

தலைமைக் கழகச் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் 1986ஆம் ஆண்டு “பெரியார் விருது” வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பூஜ்ஜியம் எடப்பாடி! ராஜ்ஜியம் முதல்வர் ஸ்டாலின்!

**வி.பி.கலைராஜன்**
*கழக இலக்கிய அணிச் செயலாளர்*



கடந்த சில நாட்களாக எடப்பாடி பழனிச்சாமி தி.மு.க. பெறப்போவது பூஜ்ஜியம் தான் என்று திரும்பத் திரும்ப கூறி வருகிறார். அதோடு எடப்பாடியார் தான் முதலமைச்சராக அமரப் போகிறார் என்று அவரே பெருமையோடு பேசி வருகிறார். மதுரையில் பிரதமர் மோடி அமர்ந்திருந்த கூட்டத்திலேயும் அப்படியே பேசி உள்ளார்.

1965ல் தி.மு.கவே தோன்றவில்லை என்றும் வரலாறு தெரியாத இந்த வாய்பந்தல்காரர் கூறியிருந்தார். (பத்திரிக்கைகளில் வந்த செய்தி) அறிஞர் அண்ணா பெயரில் உள்ள கட்சியின் பொதுச் செயலாளர் என்று கூறிக் கொள்பவர்க்கு அண்ணா ஆரம்பித்த தி.மு.க. எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்று கூட தெரியவில்லை.

ஒரு நாட்டின் பிரதமர் பொறுப்பில் இருப்பவர் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று பேசுகிறார்.

தமிழ்நாடு அமைதியான மாநிலம். வடமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்க அதாவது மேல் படிப்புப் படிக்க விரும்பினால் தமிழ்நாட்டிற்குச் செல்லுங்கள். அங்கு எந்தப் பிரச்சினையுமின்றி நல்ல கல்வி கற்கலாம் என்று நேற்று வரை தமிழ்நாடு அரசு மீது அவதூறை அள்ளி வீசிக்கொண்டிருந்த ஆளுநர் ரவி தான் மேற்சொன்னக் கருத்துக்களைக் கூறியுள்ளார்.

பிரதமர் மோடி அவருடைய ஆளுநர் ரவியிடம் கலந்தாலோசித்த பிறகாவது சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று பேசியிருக்கலாம். அவரிடம் ஐ.பி. இருக்கிறது, உளவு நிறுவனங்கள் இருக்கிறது. அவைகளிடம் கேட்டு விட்டாவது பேசியிருக்கலாம். அதை விடுத்து ஒரு நாட்டின் பிரதமர் பா.ஜ.க. ஆளாத ஒரு மாநிலத்தின் மீது இப்படி அபாண்டமாக குற்றம் சாட்டுவது எந்த விதத்தில் நியாயம்?

இதற்கு முன்பு எத்தனையோ முறை தமிழ்நாட்டிற்கு வந்து சென்றுள்ளார் பிரதமர் மோடி. அப்போதெல்லாம் திருப்பரங்குன்றம் இருந்ததோ அங்கு முருகன் இருந்ததோ அவருக்குத் தெரியாதா? இப்போது மட்டும் சென்றது ஏன்? அங்கே இருக்கும் இஸ்லாமியர்கள் வணங்கும் தர்கா மற்றும் முருகன் கோயிலில் தீபம் ஏற்றுவது சம்மந்தமான பிரச் சினை! அதை வைத்துத்தான் மத ரீதியாக பிரச்சினை எழாதா அதை வைத்து மக்களைப் பிரித்து அரசியல் லாபம் அடையமுடியாதா என்ற நோக்கம் தான் திருப்பரங்குன்றம் மோடி சென்றதற்குக் காரணம் என்று மதுரை மக்கள் பேசிக் கொள்வதில் உண்மையில்லாமலா இருக்கும்.

மேலும் பிரதமர் மோடி பேசும்போது தமிழ்நாட்டில் என்.டி.ஏ. கூட்டணி ஆட்சிதான் அமையும் என்று பேசியுள்ளார். அதே மேடையில் அமைந்திருந்த எடப்பாடி இல்லை இல்லை என் தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி தான் அமையும் நீங்கள் என்.டி.ஏ. ஆட்சி என்று எப்படிக் கூறலாம் என்று கேட்டிருக்கலாமே! ஏன் கேட்கவில்லை? ஆனால் தி.மு.க. தலைவர் போட்டி தி.மு.க. விற்கும் என்.டி.ஏவிற்கும்தான் என்று கூறியதை கேட்டு ஆத்திரமடைந்து எடப்பாடி என்.டி.ஏ. கூட்டணியுடன் போட்டி என்று மு.க.ஸ்டாலின் எப்படி கூறலாம் அ.தி.மு.க.வுடன் தானே போட்டி என்று ஏன் கூறவில்லை என்கிறார்.

**அட அறிவாளி எடப்பாடியே! என்.டி.ஏ. கூட்டணியில் தானே அ.தி.மு.க. உள்ளது? அ.தி.மு.க தனியாகவா உள்ளது. அதனால்தான் என்.டி.ஏ.வுடன் கூட்டணி என்று கூறினார் எங்கள் தலைவர். இது கூட தெரியாத உங்களை எந்த வகையில் சேர்ப்பது?**

நேற்று பேசும்போது கூட பிரதமர் மோடி அடுத்த முதல்வர் எடப்பாடி என்று கூறவில்லையே? எடப்பாடிதான், நடிகர் வடிவேலு நானும் ரவுடி நானும் ரவுடி என்றதைப் போல் நான்தான் முதல்வர் என்று கூறி வருகிறார். உள்துறை அமைச்சர் அமித்ஷா கூட எடப்பாடிதான் முதல்வர் என்று இதுவரை கூறவில்லையே Someone from ADMK என்று தானே கூறியுள்ளார். இதை சொன்ன அமித்ஷாவிற்கு எடப்பாடி என்று கூற ஏன் மனம் வரவில்லை? இதையெல்லாம் புரிந்து கொண்டு பேசுங்கள் எடப்பாடியாரே!

கடந்த வாரம் உங்கள் கட்சியின் முன்னாள் அமைச்சர் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருக்கிற சகோதரர் தங்கமணி என்ன கூறினார். தமிழ்நாட்டில் டபுள் இன்ஜின் ஆட்சிதான் அமையும் என்று தானே கூறினார். இது பத்திரிக்கைகளில் வந்த செய்தி. இதை பேசியவரும் மறுக்க முடியாது எடப்பாடியாலும் மறுக்க முடியாது. இதற்கு என்ன பதில்தரப் போகிறார்?

பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லையாம் மோடியும், எடப்பாடியும் கூறியுள்ளனர். இவர்கள் இதைப் பற்றிப் பேசலாமா? பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பெண்களுக்கு எதிராக அதுவும் பட்டியலினப் பெண்களுக்கு எதிராக கோயில்களிலேயே நடத்தப்படும் பாலியல் வன்கொடுமைகளைப் பற்றி எழுதினால் எத்தனை சம்பவங்கள் எழுதுவது. எழுதலாமா? அல்லது மேடை போட்டு சரிசமமாக நின்று பேசலாமா? சவாலை ஏற்பீர்களா?

**தமிழ்நாட்டில் பொள்ளாச்சி சம்பவத்தில் அதாவது ஒரே சம்பவத்தில் மட்டும் எத்தனை பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பதும் அதில் அ.தி.மு.க.வினர் எத்தனை பேர் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்றும் செய்தி களாகப் பத்திரிக்கைகள் வெளியிட்டதே! அதை பிரதமர் மோடியும் அறிவாரே! சான்றுக்கு இந்த ஒரே சம்பவம் மட்டும் போதுமே! எழுதிட தொடங்கினால் எத்தனையோ சம்பவங்களை எழுதலாமே! எழுதலாமா? நீங்களா பெண்களுக்கு பாதுகாப்பு தமிழ்நாட்டில் இல்லை என்று பேசுவது?**

சாத்தான் வேதம் ஓதலாமா என்று சொல்லுவார்கள், இங்கு சண்டாளர்கள் வேதம் ஓதிட முயன்றுள்ளனரே! அம்மையார் கூட்டணி வைக்க மறுத்த, வெறுத்த பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துள்ள உங்களை அம்மையாரின் ஆன்மா இருந்தால் அதுகூட மன்னிக்காதே!

பிரதமர் மோடி சட்டம் ஒழுங்கைப் பற்றி பேசி உள்ளார். குஜராத்தில் சட்டம் ஒழுங்கு நன்றாக உள்ளதா? சத்தீஸ்கரில் சட்டம் ஒழுங்கு நன்றாக உள்ளதா? உ.பி.யில் சட்டம் ஒழுங்கு நன்றாக உள்ளதா? மணிப்பூரில் சட்டம் ஒழுங்கு நன்றாக உள்ளதா? திரிபுராவில் சட்டம் ஒழுங்கு நன்றாக உள்ளதா? இங்கெல்லாம் பா.ஜ.க.தான் ஆளுகிறது. இன்னும் சொல்லப் போனால் டபுள் என்ஜின் ஆட்சிதான் நடக்கிறது.

**எத்தனை கிறிஸ்தவர்கள் கோயில்கள் இடிக்கப்பட்டுள்ளன. எத்தனை கிறிஸ்தவ பாதிரியார்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர் (உதாரணம் ஒடிசா) கிறிஸ்தவ, இஸ்லாமிய சிறுபான்மையினர் பலர் நூற்றுக்கணக்கில் சங்கி கூட்டத்தால் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதையெல்லாம் மோடியால் மறுக்க முடியுமா? மணிப்பூரில் நேற்று கூட கிறிஸ்தவ குக்கி இன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மோடி போய் சட்டம் ஒழுங்கைப் பற்றிப் பேசலாமா?**

**மோடி தமிழை மூத்த மொழி என்று ஐ.நா.வில் கூட பேசியுள்ளார். மூத்த நாகரிகம் தமிழர் நாகரிகம் என்பதற்கு அடையாளமான கீழடி ஆய்வறிக்கையை அங்கீகரித்து ஏன் வெளியிட மறுக்கிறார்? அந்த அறிக்கையை தந்த அமர்நாத்தை ஏன் இடமாற்றினார்? தமிழை இந்தியாவின் ஆட்சி மொழி என்று இனியாவது அறிவிப்பாரா?**

போதைக் கலாச்சாரம் தமிழகத்தில் அதிகரித்து உள்ளது என்றும் மோடி பேசியுள்ளார். போதைப் பொருட்கள் சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கும் போதே பீகார் துணை முதலமைச்சர் சாம்ராட் சௌத்ரி பா.ஜ.க.வைச் சேர்ந்தவர் சாப்பிட்டதை ஊடகங்கள் வெளியிட்டதே! இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார். இவர் போதைப் பொருளைப் பற்றிப் பேசலாமா?

**இந்திய விவசாயிகளின் வாழ்வாதாரத்தையே அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போட்டு அழித்திட வழிவகுத்து விட்டார் பிரதமர் மோடி. குழந்தைகள், பெண்களை கூட கையில் விலங்கிட்டு நிற்க வைத்து வர்த்தக விமானத்தில் இந்தியர்களை கேவலமாக நடத்தி அனுப்பி வைத்தார் டிரம்ப். அதைக் கூட அமெரிக்கா சென்றபோது மோடி கண்டிக்கவில்லை. அமெரிக்காவிலிருந்து வரும் பொருள்களுக்கு இந்தியா ஒரு பைசா கூட வரி விதிக்கவில்லை. ஆனால் இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா வரி விதிக்கிறது. இதை மோடியால் தடுக்க முடிந்ததா? உங்கள் வெளியுறவுக் கொள்கை இலட்சணம் இது தானா?**

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என்று இந்தியாவை டிரம்ப் மிரட்டுகிறார். அப்படி வாங்கினால் 500%வரி விதிப்பேன் என்கிறார். இதை ஏற்று ரஷ்யாவிடம் இருந்து வாங்கிய கச்சா எண்ணெயை மோடி குறைத்தாரா? இல்லையா? பிறகு எதற்கு வீராப்பு? ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் கச்சா எண்ணெய் வாங்குவோம் அதை உங்களால் தடுக்க முடியாது என்று டிரம்பிடம் மோடியால் கூற முடியுமா? ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் மிகக் குறைந்த விலையில் வாங்கிய போதும் பெட்ரோல் டீசல் விலையை ஒரு பைசா வாவது மோடி குறைத்தாரா? அந்த லாபப் பணம் சுமார் 25 லட்சம் கோடி யாரிடம் சென்றது?

இந்தியா – பாகிஸ்தான் போரில் 12 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது என்றும் நான் தான் வரியைக் காட்டி மிரட்டி இந்தியா – பாகிஸ்தான் போரை நிறுத்தினேன் என்றாரே டிரம்ப். அதை மோடி இதுவரை மறுக்காதது ஏன்? பாராளுமன்றத்தில் இது சம்பந்தமாக கேள்வி எழுப்பியவர்களுக்குப் பதில் சொல்லாமல் பாராளுமன்றத்திற்கும் வராமல் எம்.பி.களை சஸ்பெண்ட் செய்தது ஏன்?

மோடி அரசு கொண்டு வந்த ஏதாவது ஒரு மசோதா எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விகளை ஏற்று திரும்பப் பெற்றது உண்டா? இதுதான் ஜனநாயகமா?

**சீனா இந்தியாவிற்குச் சொந்தமான சுமார் 1 லட்சம் சதுர கிலோமீட்டருக்கு மேல் கையகப்படுத்தியுள்ளதே! இதை மீட்டெடுக்க என்ன நடவடிக்கையை மோடி எடுத்தார்? அருணாச்சலப் பிரதேசம் தங்கள் மாநிலம் என்று சீனா வரைபடம் வெளியிடுகிறது. இதை ஏன் மோடியால் மறுத்தோ கண்டித்தோ பேச முடியவில்லை? சீனாவைக் கண்டு பயமா?**

பிரதமர் மோடி அருணாச்சலப் பிரதேசம் சென்று வர சீனா எதிர்ப்பு தெரிவிக்கிறதை தொடர்ச்சியாகச் செய்துவருகிறது. அதைக் கண்டிக்க மோடிக்கு ஏன் துணிவு வரவில்லை? ஒரு சிறிய நாடு தைவான் அது சீனாவை எதிர்த்து சவால் விடுகிறது. முதலில் நாட்டைக் காப்பாற்றுங்கள் பிரதமர் மோடி அவர்களே, பிறகு தி.மு.க.வை வீழ்த்த முடியுமா என்று சிந்தியுங்கள்.

**திராவிட இயக்கத்தை உருவாக்கிய தந்தை பெரியார் படத்தை மதுரை மாநாட்டில் வைக்கவில்லை. அதை வைக்க எடப்பாடியால் முடியவில்லை. இவர்கள் தான் தி.மு.கவை வீழ்த்தப் போகும் வீராதிவீரர்களாம். முடிந்தால் முயற்சித்துப் பாருங்கள்.**

நாங்கள் பேனா முனையை நம்புபவர்கள். ஆனால் நீங்கள் வன்முறையை நம்புகிறவர்கள். அறிவுக்கு முன்பு ஆயுதம் வென்றதாக வரலாறு இல்லை. எங்கள் முதல்வர் அறிவாற்றலுடன் தமிழ்நாட்டு உரிமைகளை விட்டுத் தராமல் நல்லாட்சி நடத்தி வருகிறார்.

எனவே எடப்பாடி தி.மு.க.விற்கு 2026 தேர்தலில் பூஜ்ஜியம்தான் கிடைக்கப் போகிறது என்று கூறியுள்ளார். பார்க்கலாம்! வர இருக்கும் தேர்தலில் மக்கள் பூஜ்ஜியத்தை எடப்பாடிக்கும் ராஜ்ஜியத்தை வெற்றி முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும் தான் தரப்போகிறார்கள். இது நடக்கப் போவது நிச்சயம்.

ஈறடி நான்கடி கற்றவரிடம்
வாயடி கையடி தோற்றுப்போகும்” இது எடப்பாடியாருக்காக எழுதப்பட்ட வரிகள்.